

# இது, சாம்பியன்கள் கிராமம்!

"பிறந்தோம் வாழ்ந்தோம் என்பதைவிட, வாழ்ந்தோம் சாதித்தோம்னு இருக்கணும். இதுதான் சார் வாழ்க்கை. எல்லா வசதிகளும் இருந்து சாதனை படைக்க முடிந்தால், அதில் ஒரு த்ரில்லிங் இருக்காது. ஆனால், எந்த வசதியும் இல்லாத, ஏன் அரசு பஸ்ஸே எட்டிப் பார்க்காத ஒரு கிராமத்தில் இருந்து உலகத் தரத்திலான தடகள வீராங்கனைகள் உருவாகி இருக்காங்க. இப்போதைக்கு இதுதான் தமிழகத்தின் பெருமை...'' என்கிறார், தமிழகத்தின் இளம் தடகளப் பயிற்சியாளர் சுந்தரமூர்த்தி.



சுந்தரமூர்த்தி



பிராங்களின் ஜெயபால்

இவர் குறிப்பிடுவது நெல்லை மாநகரில் இருந்து 18 கி.மீ. தூரத்தில் உள்ள நாரணம்மாள் கிராமத்தைதான். இந்த கிராமத்தில் பள்ளிக்கூட வசதி இல்லை. பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்றால், பல கி.மீ. தூரம் நடந்துதான் போக வேண்டும். இல்லாவிட்டால், காய்கறி லோடு வரும் வாகனத்தில் லிஃப்ட் கேட்டுப் போக வேண்டும் என்பது இன்றுவரை இந்த கிராமத்தில் தொடரும் நிலைமை.

ஆனால், இதே கிராமத்தில் பிறந்து வளர்ந்த மாணவிகளான சுதா, ராமலட்சுமி, பி.சுப்புலட்சுமி, வேணி ஆகியோர் இன்று சர்வதேச தடகள வீராங்கனைகளுடன் போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றனர். தடகளப் பயிற்சிக்கான சர்வதேச தரத்திலான பயிற்சி வசதிகள் இல்லாத இந்தத் தென்கோடி பகுதியில் இருந்து புறப்பட்ட சுதா, மாநில அளவில் தடகளத்தில் தங்கப் பதக்கம் பெற்றவர். ராமலட்சுமி, புனேயில் நடைபெற்ற ஜூனியர் லெவல் ஓட்டப் பந்தயத்தில் தங்க அறுவடை செய்தவர். மஞ்சு, கோவையில் மாவட்ட அளவில் நடைபெற்ற உயரம் தாண்டுதலில் வெண்கலம் தட்டி வந்தவர். பி.சுப்புலட்சுமி, மாநில அளவில் 600 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெண்கலமும், நாகர்கோவிலில் நடந்த 1,500 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெள்ளியும் பெற்று வந்தவர். வேணி, மாநில அளவிலான 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டப் பந்தயத்தில் வெள்ளிப் பதக்கம் வென்றவர். இன்னும் இந்த கிராமத்தில் பெயர் தெரியாத மாணவிகள் பலர் தடகளத்தில் தடதடத்துக் கொண்டிருக்கின்றனர்.

''எங்கள் ஊருக்கு விவசாயம்தான் பிரதானம். பள்ளிக் கல்வி என்பது பலருக்கு கானல்நீர்தான். படிக்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள் பல கி.மீ. தூரம் நடந்து, அங்கிருந்து பஸ் பிடித்து பள்ளிக்குச் செல்ல வேண்டும். இப்படி நடந்து நடந்தே வலுப்பட்ட கால்கள் எங்கள் பிள்ளைகளுடையது.

அதை சரியான வழியில் திசை திருப்ப எண்ணி, எனக்கு இருக்கும் விளையாட்டு ஆர்வத்தை அவர்களுக்கும் ஊட்டினேன். அவர்களுக்குச் சரியான பயிற்சி கொடுக்க ஆரம்பித்தேன். அதன் அடுத்தகட்டமாக, அப்போது நெல்லையில் உள்ள அண்ணா விளையாட்டு அரங்கத்தின் விளையாட்டு அதிகாரி பிராங்களின் ஜெயபாலை சந்தித்துப் பேசினேன். தொடக்கத்தில் கிராமத்து மாணவ, மாணவிகள்தானே? என்று அவரும் நினைத்தார். ஆனால், களத்தில் அவர்களது பயிற்சியையும் வேகத்தையும் பார்த்து அசந்து நின்றார். இந்த மாணவிகளிடம் இவ்வளவு திறமையா? என்று வியந்த அவர், நேரடியாக எங்கள் ஊருக்கு வந்து, 'உங்கள் குழந்தைகளை தடகள பயிற்சிக்கு அனுப்புங்கள். வருங்காலத்தில் அவர்கள் மிகப்பெரிய சாம்பியன்களாக வருவார்கள்' என்று கிராம மக்களிடம் பேசினார். அங்கிருந்த மக்களோ, 'அந்தப் புள்ளைகளுக்கு அது (விளையாட்டு) சோறுபோடுமா?' என்று கேட்டனர். அவர்களை சமாளித்து குழந்தைகளை விளையாட அழைத்து வந்தோம்.

அரசு அதிகாரிகள் என்றாலே ஏனோ தானோவென வேலை செய்பவர்கள் என்ற முத்திரைக்கு மாறாக, பிராங்களின் ஜெயபால் வடிவத்தில் நாங்கள் களத்தில் கண்டது ஒரு வேகம் மிக்க விளையாட்டு வீரரைத்தான். நேரம், காலம் பார்க்காமல் இலக்கு நிர்ணயித்து மாணவிகளுக்கு கடும் பயிற்சியளித்தார். அவரது பயிற்சியின் விளைவு, இன்று எங்கள் கிராமம்தான் தென்னிந்திய அளவில் தடகள வீராங்கனைகள் அதிகம் உள்ள கிராமமாக மாறியிருக்கிறது.

எங்கள் கிராமத்தில் உள்ள தடகள வீராங்கனைகளை பல பெரிய தனியார் பள்ளிகள் தத்தெடுத்து அவர்களுக்கு நல்ல கல்வியுடன், தரமான விளையாட்டுப் பயிற்சிகளையும் வழங்கிக்கொண்டிருக்கின்றன'' என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிட்ட சுந்தரமூர்த்தி, பிராங்களின் ஜெயபாலை அறிமுகப்படுத்தி வைத்தார்.

''பயிற்சி இருக்கும் நாட்களில், நெல்லை சந்திப்பு பஸ் நிலையத்தில் இருந்து பாளையங்கோட்டைக்கு மாணவிகள் நடந்தே வந்துடுவாங்க. தொடர்ந்து பயிற்சிகள் வழங்கினோம். அவங்களோட பயிற்சி நல்லா போய்கிட்டு இருக்கும்போதே எனக்கு டிரான்ஸ்பர் வந்துடுச்சு. ஆனாலும், அந்த மாணவிகள் சோர்ந்து போயிடக் கூடாதுங்கிறதுக்காக அவங்களுக்குத் தேவையான விளையாட்டு ட்ரஸ், ஷூக்களை வாங்கிக் கொடுத்தேன். அதைக் கொண்டு அவர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் பயிற்சியில் ஈடுபட்டாங்க. அதனால் ஜெயிக்க முடிஞ்சது'' என்று பெருமிதத்துடன் தன் மாணவிகளை சுட்டிக் காட்டினார் அதிகாரி பிராங்களின் ஜெயபால்.

''சார், இன்னும் 3 ரவுண்ட் முடிஞ்சது. அடுத்தது என்ன சார்'' என்று வந்துநின்ற வீராங்கனைகள் சுதா, ராமலட்சுமி, வேணி, மஞ்சுவை கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணச்சொல்லி பேச வைத்தோம்.

''ஒரு உண்மையைச் சொல்லணும்னா, எங்கள் ஊரில் இருந்து 18 கி.மீ. தூரத்தில் இருக்கும் நெல்லை நகரம்தான் எங்களோட அதிகபட்ச பிக்னிக் ஸ்பாட். இதைத் தாண்டி நாங்கள் போகமாட்டோமா என்று ஏங்கிக் கிடந்த நாட்கள் உண்டு. ஆனால், சுந்தரமூர்த்தி சாரும், பிராங்களின் ஜெயபால் சாரும் எங்கள் வாழ்க்கைத் தரத்தையும், எங்கள் கிராமத்தின் அடையாளத்தையும் மாற்றிவிட்டனர். தடகளப் போட்டிகளுக்காக சீனா, ஜப்பான் உட்பட பல ஆசிய நாடுகளுக்கும் போயிட்டு வந்துட்டோம். அதுக்கு முன்னாடி நாங்கள் இந்த ஊர்களை எல்லாம் சினிமாவுல பார்த்ததோட சரி.

எங்கள் விளையாட்டு ஆர்வத்துக்காக பயிற்சியாளர் சுந்தரமூர்த்தி தன்னோட வீட்டு நகைகளை அடகு வைத்து செலவு செய்தார். தேசிய அளவில் நடந்த 600, 400 மற்றும் 100 மீட்டர் ஓட்டப்பந்தயம், நீச்சல், நீளம் தாண்டுதல் போட்டிகளிலும், மாவட்ட அளவில் சென்னை, திருவண்ணாமலை, நாகர்கோவில், திருச்சி, மாநில அளவில் புனே, கேரளா ஆகிய இடங்களில் நடந்த போட்டிகளில் கலந்து கொண்டு தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை வென்றுள்ளோம். இந்த வெற்றிகள் எல்லாம் எங்கள் குருநாதருக்குத்தான் சமர்ப்பணம்.

நாங்க இப்போ தமிழக டீம் சார்பில் தேர்வு செய்யப்பட்டு, தேசிய அளவிலான போட்டிகளுக்கு பயிற்சியில் இருக்கோம். எங்கள் கிராமம் எங்களுக்கு என்ன செய்தது என்பதைவிட, எங்களால் எங்கள் கிராமத்துக்கு என்ன நன்மை கிடைத்தது என்பதை நினைத்துப் பார்க்கிறோம். இந்திய வரைபடத்தில் குறும்புள்ளியாக இருக்கும் எங்கள் கிராமத்தை, உலகறிய பிரபலப்படுத்துவே எங்களை விளையாட்டில் வளர்த்த சுந்தரமூர்த்தி ஆசிரியர் மற்றும் பிராங்களின் ஜெயபால் சார் ஆகியோருக்கு நாங்கள் செலுத்தும் உண்மையான நன்றிக் கடனாக இருக்கும்'' என்றார்கள் கோரஸாக.

– பு.மைக்கேல் ராஜ்

